

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 87 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 20 – புதன்கிழமை 06 நவம்பர் 2024 – சென்னை 32 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 87 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 20 - Wednesday 06 November 2024 - Chennai 32 Pages ₹ 5.00


### மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்திட ரூ.158.32 கோடியில்

# கோவையில் 2-ஆவது ‘டைடல் பூங்கா’!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.11.2024) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில், கோயம்புத்தூர், விளாங்குறிச்சியில் 158 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் 2.94 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி பி. ராஜ்குமார், கே. ஈஸ்வரசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் இரா. கண்ணன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**கோவை, நவ. 6 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.11.2024) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில், கோயம்புத்தூர், விளாங்குறிச்சியில் 158 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் 2.94 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை திறந்து வைத்தார்.**

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் தகவல் தொழில்நுட்பத் துறையின் திறனை உணர்ந்து, விரைவான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உகந்த வணிகச் சூழலை தமிழ்நாடு அரசு உருவாக்கி வருகிறது. இதன்மூலமாக பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்கள் முதலீடு செய்வதற்குத் தமிழ்நாடு விருப்பத் தேர்வாக உருவாகியுள்ளது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் தமிழ்நாட்டில் தழைத்து வளர, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலமாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களை (ELCOSEZ) உருவாக்குதல், கிராமம் மற்றும் நகர மக்களிடையே தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் உள்ள இடைவெளியை நிரப்புதல், தமிழ்நாட்டை தகவல் தொழில்நுட்ப மின் ஆளுமையில் சிறந்த மாநிலமாக மாற்றுதல், தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியை அதிகரித்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு இவ்வரசு செயல்படுகிறது.

**கோயம்புத்தூர், விளாங்குறிச்சியில் தகவல் தொழில்நுட்பக் கட்டடம்**

கோயம்புத்தூர், விளாங்குறிச்சியில் 158 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பக் கட்டடம், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்களுக்கு இடம் அளிக்கக்கூடிய வகையில் ஒருங்கிணைந்த கட்டட மேலாண்மை அமைப்பை (IBMS) கொண்டுள்ளது.

இப்புதிய தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் இரண்டு அடித்தளங்களில் வாகனங்கள் நிறுத்துமிடமும், தரை மற்றும் ஐந்து மேல் தளங்களில் தகவல் தொழில் நுட்ப அலுவலகத்திற்கான இடவசதியும் செய்யப்பட்டுள்ளது. மேலும் 8 மின்தூக்கிகள், தீயணைப்பு வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள், மழை நீர் சேகரிப்பு வசதிகள், 72 மணி நேரம் ஜெனரேட்டர் இயக்கத்திற்காக 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டீசல் சேகரிப்பு தொட்டி, ஆறு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நிலத்தடி நீர்த்தொட்டி, 1.35 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, 130 KLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

விளாங்குறிச்சியில் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை திறந்து வைத்த முதலமைச்சர் அவர்கள், இக்கட்டடத்தில் பல்வேறு நிறுவனங்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான ஆணைகளை வழங்கினார். இதன்மூலம் சுமார் 3500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி பி.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் இரா.கண்ணன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## அமெரிக்க அதிபர் தேர்தல்: வாக்குப்பதிவு தொடங்கியது!

### இன்று முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்ப்பு!

*வாஷிங்டன். நவ. 6 -*

*அமெரிக்க அதிபர் தேர்தலில் அடுத்த அதிபர் கமலா ஹாரிசா அல்லது டொனால்டு டிரம்பா என்பதை அமெரிக்க மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் தேர்வு செய்ய உள்ளனர். வாக்குப்பதிவு முடிந்ததும் வாக்குகள் எண்ணப்பட்டு, இன்று முடிவுகள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*அமெரிக்காவின் 47வது அதிபரை தேர்வு செய்வதற்கான தேர்தல் நேற்று மாலை 4.30 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கியது. இன்று (6.11.2024) விடியற்காலை 4.30 மணி வரை நடைபெறுகிறது. இதில், ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் துணை அதிபர் கமலா ஹாரிசும், குடியரசு கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்பும் போட்டியிடுகின்றனர்.*

*கடந்த சில மாதங்களாக அதிபர் தேர்தலுக்கான பிரசாரங்கள் களைகட்டின. இதில் கமலா, டிரம்ப் இருவருக்குமே ஆதரவுகள் குவிந்தன. இதனால், கமலா ஹாரிஸ், டிரம்ப் இடையே அமெரிக்க தேர்தல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கான போட்டி காணப்படுகிறது. யார் வெற்றி பெறுவார் என்பதை கணிக்க முடியாத நிலையில் வாக்குப்பதிவு தொடங்கியது. அமெரிக்காவில் அதிபரை மக்கள் நேரடியாக தேர்ந்தெடுக்க மாட்டார்கள். தங்கள் மாகாண பிரதிநிதிகளுக்கு வாக்களித்து தேர்வு செய்வதன் மூலம் அதிபர் தேர்வு செய்யப்படுவார்.*

*அமெரிக்க நாடாளுமன்றத்தில் செனட், பிரதிநிதிகள் அவை என இரு அவைகள் உள்ளன. இதில் மேலவையான செனட்டில் 100 எம்பிக்களும், பிரதிநிதிகள் அவையில் 435 எம்பிக்களும் இருப்பார்கள். இதுதவிர, தலைநகர் வாஷிங்டனுக்கு தனியாக 3 எம்.பி.க்கள் இருப்பார்கள். மொத்தமுள்ள 50 மாகாணங்களில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் தலா 2 செனட்கள் இருப்பார்கள். ஒவ்வொரு மாகாணத்திற்கும் அங்குள்ள மக்கள் தொகை அடிப்படையில் பிரதிநிதிகள் எண்ணிக்கை இருக்கும்.*

*இந்த 538 இடங்களும் எலக்ட்ரால் காலேஜ் ஓட்டுகள் என குறிப்பிடப்படும். இதில் 270க்கும் மேற்பட்ட ஓட்டுகளை பெறும் கட்சி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். அதைத் தொடர்ந்து, வரும் டிசம்பர் 17ம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.க்கள் தங்களின் மாகாண தலைநகரில் கூடி அதிபரை தேர்ந்தெடுப்பார்கள். அடுத்த ஆண்டு ஜனவரி 6ம் தேதி அமெரிக்க நாடாளுமன்றத்தில் புதிய அதிபருக்கு வெற்றி சான்றிதழ் வழங்கப்படும். அதைத் தொடர்ந்து 2025, ஜனவரி 20ம் தேதி புதிய அதிபர் பதவியேற்பார் என்பது குறிப்பிடத்தக்கது.*

# இந்தியாவின் சக்தி வாய்ந்தவர்களின் பட்டியலில் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## ‘இண்டியா டுடே’ ஆங்கில இதழின் மதிப்பீடு!

“இந்தியாவின் அதிகார சபை” டாப் 10 பட்டியலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8வது இடம் பெற்றுள்ளார்.

‘இண்டியா டுடே’ இந்த நவம்பர் மாத இதழில் “இந்தியாவின் அதிகார சபை” என்ற தலைப்பில் சக்திவாய்ந்த மனிதர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது.

டாப் 10 பட்டியலில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு 8வது இடம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் என நீளும் இந்த பட்டியலில் 5 மாநில முதலமைச்சர்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த பட்டியலில் இடம் பெற்றதற்கான காரணம்?





Stalin in India Today's High and Mighty list

DC CORRESPONDENT
CHENNAI, NOV. 4

Chief Minister M K Stalin figures in the 'High and Mighty' list, published by India Today magazine, for setting a goal of turning the State into a 'US $ One Trillion economy' by 2030 and also ensuring that not a single seat in the last Lok Sabha elections went to the BJP, much to the national party's chagrin.

The power list has only five Chief Ministers in the ... Minister Narendra Modi, Union Home Minister Amit Shah and RSS chief Mohan Bhagwat, with Stalin taking the eight place.

Announcing the list in its latest issue, dated November 11, India Today acknowledged Stalin attracting industrial investments to the State, which had touched ₹9.74 lakh crore from over 130 conglomerates that include Fortune 500 companies.

Though his voice might not be heard in the north... lack of knowledge of Hindi, in his exemplary popularity in his traditional homeland of Tamil Nadu has ensured that his voice reached the power corridors of New Delhi, the magazine said.

Stating that he held the Southern Fort of the country in his grip, the magazine said that his party, the DMK, had 22 Lok Sabha members and 10 Rajya Sabha members the coalition led by him won 70 per cent of the votes in the last ...

**❖ அடக்கமான போர்வீரன்**

**❖ தென் கோட்டையைப் பிடித்து வைத்திருப்பவர்.**

**❖ மொழித் தடையால் மு.க. ஸ்டாலின் அவர்களின் பேச்சு வடக்கு மாநிலங்களை அடையாமல் இருக்கலாம், ஆனால் பூர்வீக நிலமான தமிழ்நாட்டில் அவருக்குள்ள செல்வாக்கு காரணமாக அவரின் குரல் டெல்லி அதிகாரத்தின் செவியை எட்டுகிறது.**

**❖ லோக்சபாவில் தி.மு.க.வுக்கு 22 எம்.பி.க்கள், ராஜ்யசபையில் 10 எம்.பி.க்கள் மட்டுமின்றி தமிழகத்தின் 39 தொகுதிகளிலும் இந்தியா கூட்டணி 70% வாக்குகளுடன் வெற்றி வாகை சூடியது.**

**❖ எல்லா மாநிலங்களிலும் பாஜகவுக்கு சில தொகுதிகள் கிடைத்த சூழலிலும் தமிழ்நாட்டில் ஒரு இடம்கூட கிடைக்காமல் செய்தது பாஜகவுக்கு அதிக வருத்தத்தை தந்தது. எனவே, தென்னிந்தியாவில் இந்தியா கூட்டணிக்கு ஒரு முக்கிய அம்சமாக மு.க.ஸ்டாலின் அவர்கள் எஃகு போல திகழ்கிறார்.**

INDIA TODAY

**❖ 2021ஆம் ஆண்டில் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர் ஆனதில் இருந்து, அவரது தி.மு.க. அரசு 2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றும் இலக்கை நோக்கி செயல்பட்டு வருகிறது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் உலகின் முன்னணி நிறுவனங்களான பார்ச்சூன் 500 நிறுவனங்கள் உட்பட 130 நிறுவனங்களிடம் இருந்து ரூ.9.74 லட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்துள்ளார்.**